**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.18/2013**

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 தஞ்சி, வயது 66, த/பெ ராஜகோபால்**

**குறுக்கு விசாரணை (1 முதல் 4 வரையான பிரதிவாதிகள் தரப்பு)**

நான் இவ்வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா என் பெயரில் மாற்றம் செய்ய வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பட்டா தவறுதலாக கொடுக்கப்பட்டுள்ளது சம்மந்தமாக நான் வருவாய் துறையிடம் மனு ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த மனுவை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கில் 5ம் பிரதிவாதியான தனக்கோட்டி இறந்த பின்னர் அவர் வாரிசுதாரர்களை தரப்பினராக இவ்வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் தனக்கோட்டி இறந்ததை நீதிமன்றத்தில் குறிப்பிட்டோம், ஆனால் வாரிசுகளை தரப்பினராக சேர்க்கவில்லை.

2. எனக்கு கிரையம் கொடுத்த நபரை நான் இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. அதற்கு பதிலாக தாய் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு பட்டா பாஸ் புக் சட்டத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன். அரசிடமிருந்து முறைகேடாக பட்டா வாங்க வேண்டும் என்றுதான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் வாங்கிய இடத்திற்குதான் பட்டா கேட்கிறேன்.

3. நானும் 5ம் பிரதிவாதியும் சேர்ந்துதான் அரசுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் அவசிய தரப்பினர்களை சேர்க்காமல் இவ்வழக்கை தாக்கல் செய்ததால் இவ்வழக்கு சட்டப்படி தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாணை முடிவடைந்தது, மறு விசாரணை இல்லை.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,Arni